# ‘வங்கக் கடல் கடைந்த’--ஆண்டாள் தரும் அற்புதத் தகவல்!!!

கட்டுரையாளர்-- லண்டன் சுவாமிநாதன்

கட்டுரை எண்–782 தேதி 9 ஜனவரி 2014

இந்தியாவின் ஒரு மாநிலம் மேற்கு வங்கம். அதற்கு அருகில் இருப்பது வங்காள தேசம். இதனுடைய பெயர் தோன்றியது எப்படி? வங்கம் என்ற சொல்லுக்கு மூலம் எது? ‘என்சைக்ளோபீடியா’க்கள் (கலைக் களஞ்சியங்கள்) வேண்டும் என்றே தவறான தகவலைத் தந்திருப்பது கண்டு வியப்படைந்தேன். ஆண்டாள் இதற்கு விடை கொடுத்துள்ளார். அவருக்கு முன் சங்கத் தமிழ் புலவர்கள் இதற்கு விடை கொடுத்துள்ளனர். தமிழ் அறியாமையும் இந்து மதத்தின் மீதுள்ள வெறுப்பு காரணமாகவும் பங்களாதேஷ் தளங்கள் தப்பான தகவலைத் தந்துள்ளன. அவைகளைத் திருத்துவதே இந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் நோக்கம். இதோ ஆண்டாள் திருப்பாவை:-

*வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை*

*திங்கள் திருமுகத்து சேயிழையார் சென்று இறைஞ்சி*

*அங்கு அப்பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்*

*பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான்கோதை சொன்ன*

*சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே*

*இங்கு இப்பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்*

*செங்கண் திருமுகத்துத் செல்வத் திருமாலால்*

*எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர் எம்பாவாய் ---(பாடல் 30)*

இந்தப் பாட்டில் ‘வங்கக் கடல்’ என்று அவர் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்டதையே இன்றும் நாம் புவி இயல் நூலில் குறிப்பிடுகிறோம். இதன் பொருள் “கப்பல்கள் சீறிப்பாயும் கடல்” என்பதாகும். வங்காள நாட்டின் கடல் துறைமுகத்தில் இருந்து ஏராளமான கப்பல்கள் சென்றதை பின்னர் வந்த யாத்ரீகர்கள், இலங்கையின் மஹாவம்சம் முதலியன உறுதி செய்கின்றன. தாம்ரலிப்தி (Tamralipt/ Tamluk) என்ற கங்கைத் துறைமுகத்தைப் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆண்டாளுக்கு வான சாத்திரம் தெரியும் என்பது வீனஸ்ஜூப்பிடர் கிரகங்கள் (வெள்ளி–வியாழன்) பற்றிய குறிப்பாலும், விலங்கியல் தெரியும் என்பது குகையில் மயிர் சிலிர்க்க சீறும் சிங்கம் பற்றிய குறிப்பாலும், பறவை இயல் (ஆர்னிதாலஜி) தெரியும் என்பது ஆனைச்சாத்தான் பற்றிய குறிப்பாலும் உள்ளங்கை நெல்லிக்கனி என விளங்குவதை முன்னமே எழுதிவிட்டேன். பூகோளமும் தெரியும் என்பதை மேற்கண்ட பாட்டில் காணலாம்.

என்னுடைய ஆராய்ச்சிக்கு முத்தாய்ப்பான பாடல் நற்றிணையில் வரும் பாடல் (189) ஆகும். மிகத் தெளிவாக ‘கங்கை வங்கம்’ ( கங்கை நதி வழியாக கடலுக்கு வரும் கப்பல்) என்றே குறிப்பிடுகிறார் புலவர். (பாடலில் அவர் பெயர் இல்லை):-

***நரம்பு இசைத்தன்ன இன்குரற் குருகின்***

***கங்கை வங்கம் போகுவர் கொல்லோ–***

***என் வினை செய்வர்கொல் தாமே?----***

பொருள்: யாழ் நரம்பின் இனிய ஓசையை உடைய குருகுகள் வாழும் கங்கை ஆற்றில் ஏறி எங்கேனும் போயிருப்பாரோ?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழ்ப் பெண்ணின் கணவன் கங்கை ஆறு வரை சென்று வணிகம் செய்த அற்புதமான தகவலைத் தருகிறது இந்தப்பாடல்!!!

கோவூர் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடல் (400) இன்னும் பிட்டுப் பிட்டு வைக்கிறது. கடலில் இருந்து வரும் கலங்கள் (வங்கம்), துறைமுகம் தோறும் சென்று வணிகம் செய்யும் வசதி படைத்தவன் சோழன் நலங்கிள்ளி என்று பாராட்டுகிறார் கோவூர் கிழார்.

அக நானூற்றின் பாடல் (255) ஒன்று பிரம்மாண்டமான தமிழ்க் கப்பல்கள் ( வங்கங்கள்) கடலைப் பிளந்து கொண்டு சென்றதை தத்ரூபமாக வருணிகின்றன.

***உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்***

***புலவுத் திரைப் பெருங்கடல் நீர் இடைப்போழ***

***இரவும் எல்லையும் அசைவு இன்றுஆகி***

-------(மதுரை மருதன் இளநாகனார்)

பொருள்: உலகமே கிளர்ந்து எழுவதைப்போன்று விளங்கும் அச்சமுடைய கப்பல், புலால் நாற்றம் வீசும்பெரிய கடலைப் பிளந்துகொண்டு போக, இரவும் பகலும் ஓயாது வீசும்காற்று.......................................................

இந்தப் பாடல், தமிழர்களின் சக்தி வாய்ந்த கடற்படை, கடல் வணிகத்தைக் காட்டும் பாடல் ஆகும்.

பழந்தமிழ் நாட்டின் கப்பல் வணிக வலிமையை வலியுறுத்துவதோடு வங்கம் என்னும் சொல்லின் புதிரையும் விடுவித்துவிட்டனர் தமிழர்கள். நற்றிணைப் புலவரின் “கங்கை வங்கம்” என்ற ஒரு சொல்லே போதுமே!!!

## *மஹாபாரதம், பாகவத புராணம் தரும் தகவல்*

மஹாபாரதத்திலும் (1-104) பாகவதத்திலும் (9-23-5/6) மிகத் தெளிவாக அங்கம், வங்கம், கலிங்கம் தோன்றிய வரலாறு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கொடுக்கப்பட்டுள்ளது:

புராதன இந்தியாவில் ஒரு விசித்திரமான வழக்கம் இருந்தது. ராஜ வம்சத்தில் குழந்தைகள் இல்லாவிட்டால் வேறு ஒருவருடன் சேர்ந்து குழந்தை பெற்று, வம்ச விருத்தி செய்யலாம் என்று. இந்த வழக்கத்தை மஹாபாரதத்தில் காண்கிறோம். குழந்தைகள் இல்லாமல் இறந்த விசித்ரவீ ர்யனின்மனைவிகள், பிராமண ரிஷிகளுடன் சேர்ந்து குழந்தைகள் பெற்றுக் கொள்வதே முறை என்று சத்யவதியிடம் பீஷ்மர் கூறுகிறார்.

அதற்கு அவர் கூறும் எடுத்துக்காட்டு தீர்கதமஸ் என்ற குருட்டு ரிஷியின் கதையாகும். அவர் வேதத்தில் பல கவிதைகளை உண்டாக்கியவர். பலி என்ற சக்ரவர்த்தியின் மனைவி சுதேஷ்ணைக்கு குழந்தை இல்லாததால் தீர்கதமஸ் மூலம் ஐந்து குழந்தைகளைப் பெற்றாள். அவர்கள்: அங்க, வங்க, கலிங்க, சுஹ்ய, பௌண்ட்ர என்று பெயர் தாங்கினர். நாட்டின் கிழக்கு பிராந்தியத்தில் இவர்கள் தங்கள் பெயர்களில் உருவாக்கிய சாம்ராஜ்யங்கள் தான் அங்க தேசம், கலிங்க தேசம் வங்க தேசம், உட்ர (ஒரிஸ்ஸா) முதலிய நாடுகளாகும்.

இதையும் தமிழ் இலக்கியத் தகவல்களையும் ஒருங்கே வைத்துப்பார்த்தால் உண்மை புலப்படும். 1.)வங்க தேசம், வங்க என்ற புதல்வனால் உருவாகியது 2.) அங்கிருந்த துறைமுகங்களில் இருந்து புறப்பட்ட வணிகக் கப்பல்களுக்கு வங்கம் என்ற பெயர் வந்தது 3.) அவை போன கடல் என்பதால் வங்கக் கடல் (வங்காள விரிகுடா) எனப் பெயர் பெற்றது. 4.)அதையே சங்க தமிழ் புலவர்களும் விதந்து ஓதினர் என்று கொள்வதே சிறப்புடைத்தாம்.

வங்கம் என்றால் வெள்ளி முதலிய உலோகங்களையும் குறிக்கும். ஒரு வேளை அவை இந்த துறைமுகங்கள் மூலமோ அல்லது வங்கம்/கப்பல் மூலம் வந்ததாலோ அப்பெயர் சூட்டப்பட்டு இருக்கலாம். மேலும் ஆராயப்படவேண்டிய விஷயம்.

வங்கம் என்ற சொல்லுக்கு கப்பல் என்றும் வங்கா என்ற சொல்லுக்கு பறவை என்றும் பொருள் கொண்டுள்ளனர் சங்க இலக்கிய உரைகாரர்கள். இது மிகவும் சரி என்பது பல இடங்களில் ஒரே பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளதால் உறுதியாகிறது.

வங்கா என்னும் பறவை மடகாஸ்கர் தீவிலும் அதே பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இதை எனது மடகாஸ்கர்–இந்தியா தொடர்பு என்ற ஆங்கிலக்கட்டுரையில் (விமர்சனப் பகுதி) கொடுத்துள்ளேன்.

**சங்க இலக்கியத்தில் வங்கம்**:--

அக.255-1; கலி.92-47; நற்.189-5; பதி.52-4’ பரி.20-16; புற.368-9; 400-20; மது.536.

வங்கா: குறு. 151-1; நற்.341-1

இவ்வளவு விசயங்கள் இருந்தும் என்சைக்ளோபீடியாவில் இவைகளை வேண்டுமென்றே விட்டுவிட்டு உளறிக் கொட்டி கிளறி மூடியிருப்பது வருந்ததக்கது.

<u>ஆண்டாள் பற்றிய எனது முந்தைய கட்டுரைகள்:</u>

1.**ஆண்டாளுடன்** 60 **வினாடி பேட்டி** ( posted on 20 January 2012)

2. Amazing Andal: Where did she see the Lion? (posted on 30 Januray 2013)

2.**சிங்கத்தை ஆண்டாள் எங்கே பார்த்தாள்**? (**ஆங்கிலக் கட்டுரை**)

Contact : swami_48@yahoo.com